Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 048 | திங்கள் Monday | 18.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழக அமைச்சர்களுக்கான இலாகாக்கள் ஒதுக்கீடு

## முதலமைச்சர் விஜய்க்கு பொது நிர்வாகம், உள்துறை, காவல் உள்ளிட்ட துறைகள் ஒதுக்கீடு



தமிழகத்தில் நடைபெற்ற 17-வது சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, புதிய முதலமைச்சராக ஜோசப் விஜய் கடந்த 10-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பொறுப்பு ஏற்றுக்கொண்டார். அவருடன் என். ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, கே.ஏ.செங்கோட்டையன் உள்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். தமிழக அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்கான துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் செங்கோட்டையனுக்கு நிதித்துறையும், ஆதவ் அர்ஜூனாவுக்கு பொதுப் பணித்துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதல்வர் விஜய்யின் வசம் பொது நிர்வாகம், உள்துறை, மகளிர் நலன், இளைஞர் நலன், காவல் உள்ளிட்ட துறைகள் உள்ளன. அமைச்சர் செங்கோட்டையனுக்கு மிக முக்கியமான நிதித்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் புஸ்ஸி ஆனந்துக்கு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு பொதுப்பணி மற்றும் விளையாட்டுத் துறை ஒதுக்கப்பட்டு உள்ளது.

அமைச்சர் அருண் ராஜுக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அசைச்சர் வெங்கட் ரமணனுக்கு உணவு மற்றும் பொது விநியோகத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிர்மல் குமாருக்கு மின்சாரம் மற்றும் சட்டத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டி.கே.பிரபுவுக்கு சுரங்கம் மற்றும் கனிமவளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜ்மோகனுக்கு பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் கீர்த்தனாவுக்கு தொழில்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

17-வது சட்டசபையில் மொத்தம் 34 அமைச்சர்கள் இடம்பெறுவார்கள் என்று தெரிகிறது. அந்த வகையில், ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு அமைச்சரவையில் 26 இடங்கள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. அமைச்சரவை முடிவு செய்யப்பட்ட பிறகு துறைகளும் ஒதுக்கப்படும். அதன்பின்னர், புதிய அமைச்சர்களுக்கு சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் கவர்னர் அர்லேக்கர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். தொடர்ந்து, புதிய அரசின் முதல் சட்டசபை கூட்டம் கவர்னர் உரையுடன் ஆரம்பமாகும். கவர்னர் உரை நிகழ்த்தி முடித்ததுடன், அடுத்த 3 நாட்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெறும். இந்த விவாதத்தில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவார்கள். நிறைவு நாளில் முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் பதில் உரை வழங்குவார்.



அதன்பின்னர், 2026-27-ம் ஆண்டுக்கான பட்ஜெட் தமிழக சட்டசபையில் தாக்கல் செய்யப்படும். கடந்த தி.மு.க. ஆட்சியில் பொது பட்ஜெட், வேளாண் பட்ஜெட் என்று தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இந்த முறை ஒரே பட்ஜெட்டாக இருக்குமா, அல்லது வேளாண்மைக்கும் தனியாக தாக்கல் செய்யப்படுமா என்பது இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை. பட்ஜெட்டுக்கு பிறகு அதன் மீதான விவாதம் நடைபெறும். தொடர்ந்து, நிதி அமைச்சர் பதில் உரை வழங்குவார்.

# உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்லுங்கள்

# ஆய்வு குழுவுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



சென்னை: தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி, கட்சிக்காரர்கள் சொல்லும் உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்லுங்கள் என ஆய்வுக் குழுவை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டமன்றத் தேர்தல் தோல்வி குறித்து கள ஆய்வு மேற்கொள்ள 38 பேர் கொண்ட குழுவை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்த நிலையில், அவர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை திமுகவின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

ஆலோசனை கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ. ராசா எம்பி, கனிமொழி எம்.பி, பொன்முடி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், ஆய்வு குழு நிர்வாகிகளுக்கு பல்வேறு உத்தரவுகளை வழங்கினார். குறிப்பாக தோல்வி அடைந்த தொகுதிகளில் உண்மையான காரணங்கள் அனைத்தும் அறிக்கையாக கொடுக்க வேண்டும் என்றும், எந்த சமரசமும் இல்லாமல் களத்தில் உள்ள உண்மை நிலவரத்தை தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இக்குழுவிடம் இருந்து பெறப்படும் அறிக்கையில் அடிப்படையில் திமுகவில் விரைவில் பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார். மேலும், ஆய்வுக் குழுவுக்கு கீழ்கண்ட அறிவுறுத்தல்களையும் மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

- தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி, கட்சிக்காரர்கள் சொல்லும் உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்வது மட்டுமே உங்கள் வேலை.
- நீங்கள் யாரையும் காப்பாற்றவும் முயற்சி செய்ய வேண்டாம். யாரையும் பழிவாங்கவும் எண்ணக் கூடாது.
- இரண்டுபேர்கொண்ட குழுவாகத்தான் யாரையும் சந்திக்க வேண்டும். ஒருவர் மட்டும் தனியாகச் சந்திக்க கூடாது.
- தொண்டர்களை மனம்விட்டுப்பேசஅனுமதியுங்கள். அவர்களின் குறைகளை, தேர்தல் முடிவுகளுக்கான காரணங்களை அவர்கள் கொட்டித் தீர்க்கட்டும்.
- தலைவரான என் மேலேயே குறை சொன்னாலும் பரவாயில்லை. அதை குறித்து வைத்து உங்களது அறிக்கையில் வழங்குங்கள்.
- நிர்வாகிகளின் உணர்வு என்ன? அவர்கள் உண்மையில் என்ன நினைக்கிறார்கள்? அது மட்டும்தான் எனக்கு தேவை.
- டாக்டரிடம் பொய் சொல்லக் கூடாது என்பார்கள். இப்போது நானும் அந்த இடத்தில் தான் இருக்கிறேன். என்னிடம் எதையும் மறைக்காதீர்கள்.
- நோய் என்னவென்று தெளிவாகத் தெரிந்தால் தான் அதற்கு மருந்து கொடுக்க முடியும்.
- திமுகவினர் உங்களிடம் சொல்லும் தகவல்களை வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. குறிப்பாக, சம்பந்தப்பட்ட நபர்களிடம் சொல்லக் கூடாது.
- அப்படி செய்தால் இந்த ஆய்வின் நோக்கமே வீணாகிவிடும்.
- பிரச்சினைகளைச் சரி செய்து, நம்மை மாற்றிக் கொண்டால் தான் அடுத்த 100 ஆண்டுகளுக்கு உயிர்ப்போடு இயங்க முடியும்.
- நீங்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில் தான் கழகத்தில் மாற்றங்கள், சீர்திருத்த ங்களைச் செய்யப் போகிறேன்.
- அதனால் scan report போல துல்லியமாக இது இருக்க வேண்டும்.
- ஜூன் 5-க்குள் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, இதன் மீதான நடவடிக்கைகளை ஜூன் மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும்.
- உடன்பிறப்புகளின் உண்மையான உணர்வினை அறிந்து வந்து சொல்லுங்கள்

ஆகிய அறிவுரைகளை வழங்கியதாக தெரிவித்தார்.

நாளை மறுநாள் முதல் 38 பேர் கொண்ட குழு தமிழகம் முழுவதும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதிக்கு சென்று திமுகவின் தோல்விக்கான காரணங்கள் குறித்தும், சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்தும் ஆராய உள்ளனர்.

இது மட்டுமின்றி, தேர்தல் முடிவுகள் குறித்து இதுவரை 2.5 லட்சம் நிர்வாகிகள், தொண்டர்கள் https://udanpirapinkural.in வெப்சைட் மூலம் தலைமைக்கு புகார் மனு கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம்: மின்சார வாரியம் நடவடிக்கை



சென்னை: 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தின் படி, கணக்கீட்டு மென்பொருளில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக மின்சார வாரியம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை அனைத்து வீட்டு மின் இணைப்புகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் வரை இலவசம், அதற்கு மேல் 101 – 500 யூனிட் வரை பயன்படுத்தினால், 100 யூனிட்கள் கழிக்கப்பட்டு மீதமுள்ள யூனிட்டுகளுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், 2026 சட்டப் பேரவை தேர்தல் வாக்குறுதியில், 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என தவெக தலைவர் விஜய் அறிவித்திருந்தார். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், தமிழ்நாடு முழுவதும் இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தும் குடும்பங்களுக்கு, 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தில் கையெழுத்திட்டார். மே 10 ஆம் தேதியிலிருந்து 200 யூனிட் இலவச மின்சாரம் கணக்கிடப்படும் எனவும், 500 யூனிட்களுக்கு மேல் பயன்படுத்தினால் 100 யூனிட் இலவசம் என்ற பழைய திட்டமே தொடரும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் புதிய கட்டுப்பாட்டு அலுவலர், அனைத்து மாவட்ட மின் பொறியாளர்களுக்கு அனுப்பியுள்ள "அறிக்கையில், "கட்டண மென்பொருளில் தகுதி சரிபார்ப்பு, மானியக் கணக்கீட்டு முறை, கட்டணப் பட்டியல் உருவாக்கம் மற்றும் கணக்கியல் / அறிக்கை விதிகள் தொடர்பான தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டண மென்பொருளில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய கூடுதல் மானிய விதிமுறை குறித்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு தெரிவிக்க பொறியாளர்களுக்கு அறிவுறுத்தல் மேற்கொண்டு, இரு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்கள் வரை மின்சாரம் பயன்படுத்தும் தகுதியுள்ள வீட்டு உபயோக நுகர்வோருக்கு மே 10 முதல் 200 யூனிட்கள் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும். இரு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோர், தற்போதுள்ள கட்டண முறையிலேயே 100 யூனிட்கள் வரையிலான இலவச மின்சாரப் பலனைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து சேவையைப் பெறுவார்கள். இரு மாதத்திற்கு 200 யூனிட் இலவச மின்சார அறிவிப்பை செயல்படுத்துவது தொடர்பான அறிவுரைகள் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளன" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் கிளாம்பாடியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ச.ஜோசப் விஜய் தமிழக முதல்வராக பதவி ஏற்றுக் கொண்டதையும், டி.சண்முகன் எம்எல்ஏவாக பதவி ஏற்றுக்கொண்டதை கொண்டாடும் விதமாக கிளாம்பாடி பேரூராட்சி தமிழக வெற்றிக் கழகத்தின் கிளாம்பாடி பேரூர் செயலாளர் வி.அருண்குமார் மற்றும் பொறுப்பாளர்கள் தலைமையில் வெற்றி கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



சிவகங்கை எம்எல்ஏ குழந்தைராணி நாச்சியார் மருதுபாண்டியர்களின் சிலைக்கு மாலை அணிவித்து தொண்டர்களுடன் வணங்கினார்.

# நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சார்பில் வளாகத் தேர்வு




நந்தாகலைமற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் இறுதி ஆண்டு பயின்று வெளியேறும்மாணவர்களுக்கெனவளாகத்தேர்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பெங்களூரினை தலைமையிடமாக கொண்டு விரிவான நிதி மேலாண்மைக்கு தீர்வுகளை வழங்கி வரும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான "அவேகா பிசினஸ் சொலுயூசன்ஸ்" நிறுவனம் பங்கு பெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளைத் தலைவர் வி.சண்முகன் தலைமை நடைபெற்ற இவ்வளாகத் தேர்வினை "அவேகா பிசினஸ் சொலுயூசன்ஸ்" நிறுவனத்தின் சார்பில் அதன் இயக்குனர் சதீஸ் குமார் தலைமையிலான குழு கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.மேலும் கல்லூரியின் முதல்வர் முனைவர்.மனோகரன் முன்னிலை வகித்தார்.

பின்னர் "அவேகா பிசினஸ் சொலுயூசன்ஸ்" நிறுவனத்தின் இயக்குனர் சதீஸ் குமார் சிறப்புரையாற்றுகையில், 2017 -ல் ஆரம்பிக்கப்பட்ட எங்களது நிறுவனம் 200 க்கும் மேற்பட்ட தங்களை போன்று பட்டதாரிகளைக் பணியாளர்களாககொண்டுபெங்களூரு மற்றும் ஈரோடு நகரங்களில் இயங்கி வருவதாக கூறினார்.

மேலும் எங்கள் நிறுவனத்தின்மூலம் நிதி கணக்கியல், இணக்கம் மற்றும் தணிக்கைகளுக்கு தேவையானஆலோசனைகள் மற்றும் மூலதன நிதி நிர்வாகத்திற்கு தேவையான பல்வேறு தீர்வுகளை வழங்கி வருவதாக தெரிவித்தார்.

இவ்வளாகத்தேர்வில்கலந்துகொண்ட மாணவர்கள் குழுவிவாதம் மற்றும் மனித வள நேர்காணல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதன் அடிப்படையாக கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு பணி நியமன சான்றிதழ் வழங்கப்படும் என்று தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வளாகத் தேர்வினை ஏற்பாடு செய்திருந்த கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலக ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் கல்லூரியின் நிர்வாக அலுவலர் முனைவர். வி. சி. சீனிவாசன் ஆகியோர்பாராட்டினார்கள்.



# தென்காசி மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகளை கலெக்டர் கமல் கிஷோர் ஆய்வு செய்தார்

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமசாமியாபுரம், முள்ளிக்குளம், தலைவன் கோட்டை, மலையடிக்குறிச்சி, நெற்கட்டும் செவல் ஆகிய ஊராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் ஊரகவளர்ச்சித்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமசாமியாபுரம் ஊராட்சிக்குட்பட்ட வெள்ளக்கவுண்டன் பட்டி அம்மன் கோவில் செல்லும் சாலை மேற்கு 1-வதுதெருவில்மூலதன மானிய நிதி திட்டம் (2025-2026)இன்கீழ்ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் வாறுகால் மற்றும் சிமெண்ட்தளம்அமைக்கப்பட்டுள்ள பணிகளையும், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (2026-2027) - இன் கீழ் ரூ.95.05 இலட்சம் மதிப்பீட்டில் இந்திரா நகர் - இந்திரபேரி பகுதியில் (2.140 மீட்டர்) தார்சாலை அமைக்கப்பட்டுள்ள பணிகளையும், முள்ளிக்குளம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணைகளையும், ஊரக கட்டடங்கள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் ஊராட்சி மன்றஅலுவலககட்டடம் புணரமைக்கப்பட்டு வரும் பணிகளையும், நெற்கட்டும் செவல் ஊராட்சியில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் சமுதாயநலக்கூடத்திற்கான கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதையும், தலைவன்கோட்டை ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரக வீடு கட்டும் திட்டத்தின் கீழ்பயனாளிவீடுகட்டும் பணிகளையும்,முதல்வரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் பயனாளி வீடு கட்டும் பணி போன்ற ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு. தண்டபாணி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் , அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இரத்தினம் குளோபல் பல்கலைக்கழக துவக்க விழா

# தரமான கல்வி, தொழில்நுட்பம், தொழில் முனைவோர் வளர்ச்சி என சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட உள்ளதாக இரத்தினம் கல்வி குழுமங்களின் தலைவர் மதன் ஏ.செந்தில் பேச்சு





கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள, இரத்தினம் குழும கல்வி நிறுவனங்கள், இரத்தினம் குளோபல் பல்கலைகழகமாக புதிய பெயரில் புதிய பல்கலைக்கழக அடையாளத்துடன் செயல்படவுள்ளது...

இந்நிலையில் இதற்கான துவக்கவிழா இரத்தினம் கிராண்ட் ஹால் வளாகத்தில் நடைபெற்றது..

விழாவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து கல்வியாளர்கள், பல்வேறு தொழில் முனைவு துறைகளை சேர்ந்த தொழிலதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர்...

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மதன் ஏ செந்தில் யூஜிசி 2023 விதிமுறைகளின் கீழ் தமிழகத்தில் முதன்முறையாக நிகர்நிலைப் பல்கலைக்கழகம் அந்தஸ்தைப் பெற்ற கல்வி நிறுவனமாக இரத்தினம் குளோபல் பல்கலைக்கழகம் அறிமுகமாகி உள்ளதாக குறிப்பிட்ட அவர், இரத்தினம் குளோபல் பல்கலைக்கழகம், கல்வி, தொழில்நுட்பம், தொழில் முனைவோர் வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் புதிய கல்வி சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.. இரத்தினம் கல்வி நிறுவனங்கள் நீண்ட வருடங்களாக கல்வித்துறையில் சேவையாற்றி வருவதாக கூறிய அவர்,தற்போதைய நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப புதிய பாடத்திட்டங்களை உருவாக்க இருப்பதாக தெரிவித்தார் குறிப்பாக எதிர்கால தலைமுறைக்கான புதுமையான கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் இந்த பல்கலைக்கழகம் செயல்படும்என அவர் நம்பிக்கை தெரிவித்தார். இரத்தினம்கல்விகுழுமங்களின் சி.இ.ஓ. மாணிக்கம்,சி.பி.ஓ.நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக காங்கிரஸ் கமிட்டி விவசாய பிரிவு மாநில பொதுச்செயலாளர் ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள அறிக்கை:



முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி மற்றும் சி.வி.சண்முகம் ஆகியோர் தலைமையில் ஆன அதிமுக அணியினர் தமிழக வெற்றிக் கழகத்தோடு இணைந்து கூட்டணி சேர்ந்து ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்று கேட்டு வருவதை தமிழக மக்கள் என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் ஏனென்றால் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆட்சி காலத்தில் இவர்கள் அமைச்சர்களாக இருந்து செய்த மாபெரும் ஊழலை தமிழக மக்கள் எளிதாக என்றும் மறந்து விடமாட்டார்கள். மேலும் இவர்களை போன்று இவர்களிடம் உள்ள மேலும் முன்னாள் அமைச்சர்கள்அனைவரும் மிக பெரிய ஊழல்வாதிகள் எனவே இவர்களை போன்றவர்களை தமிழக அமைச்சரவையில் சேர்த்தால் தமிழக வெற்றிக் கழகத்திற்குஒட்டுமொத்த தமிழக மக்கள் மத்தியில் மிகபெரிய கெட்ட பெயரை உருவாக்கும் எனவே தமிழகவெற்றிக் கழகத்தின் எதிர்கால அரசியலை கருத்தில் கொண்டு வேலுமணி மற்றும் சி.வி.சண்முகம் தலைமையில் ஆன அதிமுக கட்சியுடன் எந்த விதத்திலும் கூட்டணி வைக்க கூடாது.மேலும் ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்ற எந்த வித நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள கூடாது என தமிழக காங்கிரஸ் விவசாய பிரிவு சார்பில் கேட்டுக்கொண்டார்

# செய்தியாளர்களை முதல்வர் சந்தித்தே ஆக வேண்டும் என்பது கட்டாயம் இல்லை அமைச்சர் நிர்மல் குமார் பதில்



மதுரை: அரசு சார்பாக என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன என்பது குறித்த அறிக்கை நாள்தோறும் வெளியிடப்பட்டு வரும் வேளையில், முதலமைச்சர் செய்தியாளர்களை சந்தித்தே ஆக வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் கூறியுள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்வதற்காக அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் இன்று (மே 16) வருகை தந்தார். தரிசனத்திற்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த அவர், "மக்கள் என்ன நினைத்து எங்களுக்கு வாக்களித்தார்களோ, அந்த வேலைகளை நாங்கள் துவக்கியு ள்ளோம். நேற்று மதுரை மாவட்டத்தில் காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் சந்தித்து ஆலோசனை நடத்தினோம்.

எங்கெல்லாம் விதிமீறி போதைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறதோ, அங்கெல்லாம் கண்காணிப்பு செய்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் மதுரையின் பல்வேறு பகுதிகளில் விதிமீறி இயங்கும் மதுபானக் கூடங்கள் மற்றும் பார்களில் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டு சீலும் வைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் சட்டத்திற்கு புறம்பாக இயங்கும் குவாரிகள் அடையாளம் காணப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை நடந்த ஆட்சி போன்று தவெக ஆட்சி இருக்காது. முதலமை ச்சர் விஜய் என்ன நினைத்து செயல்படுகிறாரோ, அதை ஒட்டியே அனைவரும் செயல்பட வேண்டும் என கூறி வருகிறோம்.

இதற்கு பொதுமக்களும் முழு ஒத்துழைப்பை கொடுத்து வருகின்றனர். அடுத்த மூன்று மாதங்களுக்குள் அனைத்தும் சீரமைக்கப்பட்டு சரியான பாதையில் நடைபெறும். தற்போது சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது. தமிழக முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறை வாரியாக தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

அடுத்து ஒரு சில நாட்களில் பெரிய அளவிலான மாற்றத்தை பார்க்கலாம். மதிய உணவைக் கையோடு கொண்டு வந்து, காலையில் இருந்து மாலை வரை தலைமைச் செயலகத்திலேயே அமர்ந்து பல்வேறு ஆய்வு பணிகளில் முதலமைச்சர் விஜய் ஈடுபட்டு வருகிறார். இதுபோன்று எந்த முதலமைச்சரும் பணி செய்யவில்லை என அனைவரும் கூறுகின்றனர்.

அனைத்து துறைகளையும் முழுமையாக ஆய்வு செய்து தெளிவான வெள்ளை அறிக்கை வெளியிட உள்ளோம். ஒவ்வொரு துறையிலும் என்ன இருக்கிறது? என்ன இல்லை? என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துறைகளும் புரையோடிப்போய் உள்ளன. அவை கடுமையான எதிர்மறை வளர்ச்சியில் உள்ளன. இவற்றையெல்லாம் சரி செய்த பிறகு தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும். அமைச்சர்களுக்கான இலாகா இதுவரை ஒதுக்கப்படவில்லை. யார் யாருக்கு என்ன துறை என்பதை முதலமைச்சர் முடிவு செய்வார்" என்று கூறினார்.

தொடர்ந்து, முதலமைச்சரான பின் இதுவரை விஜய் செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. அவர் எப்போது சந்திப்பார் என கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், "அரசு சார்பாக என்னென்ன பணிகள் நடைபெறுகிறது என்பது குறித்த செய்தி அறிக்கை தினமும் வெளியிடப்பட்டு வரும் வேளையில், முதலமைச்சர் செய்தியாளர்களை சந்தித்தே ஆக வேண்டும் என்பதும் கட்டாயம் இல்லை. கண்டிப்பாக மக்களுக்கு தேவையான அனைத்தும் வெளிப்படையாக நடைபெறும். தேவையான நேரத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்திப்பார்" என்றார்.



தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த தி.மு.க. பேரூராட்சி கவுன்சிலர் தென்காசி மே 16 நடந்துமுடிந்த 17 வதுசட்டமன்றபொதுதேர்தலில்தமிழகவெற்றிகழகம்பெருவாரியான வாக்குகளை பெற்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றசட்டமன்றஉறுப்பினர்களின்ஆதரவோடுமுதல்வர்ஜோசப்விஜய்தலைமையிலான ஆட்சி தற்போது தமிழகத்தில் நடைபெற்று வருகிறது அதனை தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள மாற்றுக் கட்சியினைசார்ந்தவர்களும் சமூக நல அமைப்பினர் தொழிலதிபர்கள் தொடர்ந்து தமிழக வெற்றி கழகத்தில் இணைந்து வருகின்றனர் அதைப் போன்றுதென்காசி மேற்கு மாவட்டம் அச்சன்புதூர் பேரூராட்சி திமுக கவுன்சிலர் சுரேஷ்குமார் அவர்கள் தனது ஆதரவாளர்களுடன் தமிழக வெற்றிக் கழகத்தின் தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் சகோதரர் நியாஸ் அவர்கள் தலைமையிலும் மாவட்ட கழக இணை செயலாளர் குமரன் நர்சரி கார்டன் அதிபரும் நயினாரகரம் ஊராட்சி மன்ற தலைவருமாகிய லயன் முத்து (எ) முத்தையா அவர்கள் முன்னிலையிலும் தம்மை தவெக வின் அடிப்படை உறுப்பினராக இணைத்துக் கொண்டார் அப்போது அவரரது நான்கு சக்கர வாகனத்தில் தவெக வின் வெற்றிக்கொடியை மாவட்ட கழக செயலாளர் தமது திருக்கரங்களால்பட்டொளிவீசிபறக்கவிட்டார்இந்நிகழ்ச்சியில்,தவெகதொண்டர்களும் தொழிலதிபர்களுமாகிய யாத்ராராணி பைனான்ஸ் யாத்ராபழனி ,எஸ்எம் அலி , குமந்தாபுரம் பாலமுருகன் ,ஹேப்பி ஹாலிடேஸ் கார்த்திகேயன்விஷால் குமார் மற்றும் நண்பர்கள் உடனிருந்தனர்

# ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 4 வயது குழந்தை: 9 மணி நேர போராட்டத்திற்கு பின் பத்திரமாக மீட்பு



ஹோஷியார்பூர் (பஞ்சாப்): ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 4 வயது குழந்தை 9 மணி நேர போராட்டத்திற்கு பின் பத்திரமாக மீட்கப்பட்டது.

பஞ்சாப் மாநிலம் ஹோஷியார்பூர் மாவட்டம் சக் சமனா கிராமத்தை சேர்ந்தவர் ரவீந்தர் சிங். இவரது மகன் குர்கரன் சிங் (என்ற) வன்ஷ். விவசாயியான ரவீந்தர் சிங்கிற்கு அவரது வீட்டையொட்டி விளை நிலம் உள்ளது. இங்கு அண்மையில் புதிதாக ஆழ்துளைக் கிணறு ஒன்று தோண்டியிருந்தார். அந்த பணிகள் நிறைவடைந்த நிலையில், ஆழ்துளை கிணற்றை சுற்றி மண் மற்றும் கற்களை கொண்டு மூடும் பணி இன்னும் நிறைவடையாமல் இருந்தது. அதாவது ஆழ்துளை கிணறு மூடப்படவில்லை.இந்த நிலையில் நேற்று மாலை 4 மணி அளவில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த குழந்தை குர்கரன் சிங், எதிர்பாராதவிதமாக அந்த ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்தது. இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அங்கிருந்தவர்கள் ஓடி வந்து குழந்தையை மீட்க முயற்சி செய்தனர். ஆனால், அதற்குள் சுமார் 25 முதல் 30 அடி ஆழத்திற்கு குழந்தை சென்றுவிட்டது.

கிராம மக்கள் ஒன்று சேர்ந்து குழந்தையை மீட்க முயற்சி செய்தனர். ஆனால், அதற்கு பலன் கிடைக்கவில்லை. இதனையடுத்து உடனடியாக காவல் மற்றும் தீயணைப்பு துறைகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் விரைந்து வந்து குழந்தையை மீட்க பல்வேறு கட்ட முயற்சிகள் மேற்கொண்டனர்.

மேலும், மாநில அமைச்சர் ரவ்ஜோத் சிங், காவல்துறை துணை ஆணையர் ஆஷிகா ஜெயின் மற்றும் மூத்த காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து மீட்புப் பணிகளை தீவிரப்படுத்தினர். அவர்களின் முயற்சிக்கு பலன் கிடைக்காததால், உடனடியாக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வந்தவுடன் கிணற்றுக்குள் ஆக்சிஜன் குழாயை செலுத்தி, குழந்தைக்கு தடையின்றி ஆக்சிஜன் கிடைப்பதை உறுதி செய்தனர். மேலும், கேமரா மூலம் குழந்தையின் அசைவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

மேற்பகுதி வழியாக குழந்தையை மீட்க வாய்ப்பு இல்லாததால், கனரக இயந்திரம் வரவழைக்கப்பட்டு ஆழ்துளைக் கிணற்றுக்கு இணையாக 30 அடி ஆழத்திற்குப் பள்ளம் தோண்டப்பட்டு, பின்னர் குழந்தை இருக்கும் பகுதியை நோக்கி ஒரு குறுகிய சுரங்கப் பாதை அமைக்கப்பட்டது.

இரவு முழுவதும் நடைபெற்ற இந்த தீவிரப் போராட்டத்தின் பலனாக, இன்று அதிகாலை குழந்தை குர்கரன் சிங் எவ்வித காயமுமின்றி பத்திரமாக மீட்கப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்தவர்கள் கைகளை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மீட்புக் குழுவினர் குழந்தையை மீட்டவுடன், அங்கிருந்த மருத்துவக் குழுவினர் முதலுதவி அளித்து மேல் சிகிச்சைக்காகவும், மருத்துவக் கண்காணிப்பிற்காகவும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

குழந்தையை பத்திரமாக மீட்ட தேசிய பேரிடர் மீட்புப் படையினருக்கு பெற்றோரும், அந்த கிராம மக்களும் நன்றி தெரிவித்தனர்.


மீட்புப் பணிகள் தொடர்பாக பேசிய தேசிய பேரிடர் மீட்புப் படையின் துணை தளபதி பங்கஜ் சர்மா, "நாங்கள் வந்தவுடனே சிறுவனின் நிலைமையைப் பார்த்தோம். அவன் நன்றாகவே இருந்தான். ஆனால், மீட்புப் பணிகள் எங்களுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஏனெனில், அந்த பகுதியில் மண் தொடர்ந்து சரிந்து கொண்டே இருந்தது" என்றார்.

தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, பஞ்சாப் காவல் துறை, தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் உள்ளூர் தன்னார்வலர்கள் அடங்கிய குழுக்கள் இந்த மீட்புப் பணியில் ஈடுபட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பஞ்சாப் அமைச்சர் ரவ்ஜோத் சிங் மற்றும் ஆம் ஆத்மி கட்சி எம்.பி. ராஜ் குமார் சப்பேவால் ஆகியோர் விடிய விடிய சம்பவ இடத்தில் இருந்து, மீட்பு நடவடிக்கைகளை கண்காணித்தனர்.

குழந்தை மீட்கப்பட்டது குறித்து பேசிய காவல் துறை துணை ஆணையர் ஆஷிகா ஜெயின், "மாலை 4 மணியளவில் சம்பவம் குறித்த தகவல் கிடைத்தவுடன் நாங்கள் உடனடியாக மீட்பு நடவடிக்கையில் இறங்கினோம். குழந்தையின் நிலையைக் கண்காணிக்கவும், ஆக்சிஜன் விநியோகத்தை உறுதி செய்யவும் மீட்புக் குழுவினர் முதலில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் ஒரு கேமராவையும் ஆக்சிஜன் குழாயையும் இறக்கினர். நாங்கள் அனுப்பிய கேமிரா மூலம் சிறுவனின் அசைகள் தெரிந்தன. பின்னர், தளர்வான மண் ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்ததால், கேமராவில் கண்காணிப்பது கடினமாகி, மீட்புப் பணியின் சிக்கல் மேலும் அதிகரித்தது" என்று கூறினார். மீட்புப் பணியின்போது, குழந்தையின் தாயாரை சம்பவ இடத்திற்கு வரவழைத்த அதிகாரிகள், அவரிடம் பேசுமாறு கூறியுள்ளனர். தாயார் பேசுவதைக் கேட்டு குழந்தை அழுகையை நிறுத்தியதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நாய்க்கு வைத்த உணவை சாப்பிட்ட 3 வயது குழந்தை உயிரிழப்பு ஆம்பூரில் சோகம்




திருப்பத்தூர்: ஆம்பூர் அருகே நாய்க்கு வைத்த உணவை சாப்பிட்ட 3 வயது பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆம்பூரை அடுத்த மாதகடுப்பு பகுதியை சேர்ந்தவர் சதீஷ். மரம் ஏறும் தொழில் செய்து வரும் இவருக்கு திருமணமாகி ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன.

இந்த நிலையில், கடந்த 10 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் சதீஷின் மனைவி ஸ்ரேயா கோழிக்கறி வாங்கி குழம்பு வைத்துள்ளார். தொடர்ந்து, மே 12 ஆம் தேதி மீதமிருந்த அந்த கறிக்குழம்பை நாய்க்கு உண்ண வைத்ததாகத் தெரிகிறது.

அப்போது வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த அவர்களது 3 வயது குழந்தை பூமிகா மற்றும் ஒருவயது மகள் ரேணுகா இருவரும், நாய்க்கு வைத்த உணவை எடுத்து உண்டுள்ளனர். அதில் இருவருக்கும் உடல் நலம் பாதிக்கப்பட்டு, வாந்தி எடுத்துள்ளனர்.

அதனைக் கண்டு பயந்து போன சதீஷ் மற்றும் ஸ்ரேயா, குழந்தைகள் இருவரையும் சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். பின்னர், பூமிகாவிற்கு உடல்நலக் குறைவு அதிகமானதால், அந்த குழந்தை மட்டும் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அங்கு கடந்த 3 நாட்களாக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று (மே 15) குழந்தை பூமிகா சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மருத்துவர்கள் அறிவித்தனர். இந்த தகவல் அறிந்து வந்த ஆம்பூர் கிராமிய காவல் துறையினர், குழந்தையின் உடலைப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

பின்னர், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த காவல் துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நாய்க்கு வைத்த உணவை, தெரியாமல் உண்ட 3 வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அமித்ஷாவை மிரட்டியதாக புகார் அபிஷேக் பானர்ஜி மீது வழக்குப்பதிவு

கொல்கத்தா: மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் போது வன்முறையைத் தூண்டு வகையிலும், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு மிரட்டல் விடும் வகையில் பேசியதாகவும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபிஷேக் பானர்ஜி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில், 207 தொகுதிகளில் வெற்றி பெற்று பாஜக முதன்முறையாக ஆட்சியை கைப்பற்றியது. அந்த கட்சியின் சுவேந்து அதிகாரி மேற்கு வங்க மாநிலத்தின் 9-வது முதலமைச்சராக கடந்த 9-ந் தேதி பதவியேற்றுக் கொண்டார்.

இந்த தேர்தலில் தொடர்ந்து 3 முறை முதலமைச்சராக பதவி வகித்த மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. அந்த கட்சி 80 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று ஆட்சியை பறிகொடுத்தது.

இந்த நிலையில், மம்தா பானர்ஜியின் அண்ணன் மகனும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் அந்த கட்சியின் எம்பியுமான அபிஷேக் பானர்ஜி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கொல்கத்தாவின் பாகுயாட்டி பகுதியை சேர்ந்த ரஜிப் சர்க்கார் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிதான்நகர் சைபர் க்ரைம் காவல் நிலையத்தில் மே 15 ஆம் தேதி மதியம் இந்த



வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் கீழ் கலவரத்தைத் தூண்டுதல் (பிரிவு 192), இரு பிரிவினரிடையே பகைமையை வளர்த்தல் (பிரிவு 196), குற்றவியல் மிரட்டல் (பிரிவு 351(2)), மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் (பிரிவுகள் 123, 125) பிணையில் வெளிவர முடியாத கடுமையான பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

2026 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நந்திகிராம், அரம்பாக் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்களில், மாற்றுக்கட்சித் தொண்டர்களை மிரட்டும் தொனியில் அபிஷேக்பானர்ஜி பேசியாக குற்றம்சாட்டப்பட்டது.

குறிப்பாக, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நோக்கி, உங்களை எந்த காட்பாதர் காப்பாற்றுவார் என்று பார்ப்போம் என மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியதும், அந்தப் பேச்சுக்கள் அவரது அதிகாரப்பூர்வ ஃபேஸ்புக் பக்கத்தில் பரப்பப்பட்டதும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் தோல்வியடைந்து, பாஜக ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில், இந்த வழக்குப்பதிவு அந்த மாநில அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, பாதுகாப்பு மறுஆய்வுக்கு பின் அபிஷேக்பானர்ஜிக்கு வழக்கப்பட்டிருந்த இசட் பிளஸ் பிரிவு பாதுகாப்பும் கடந்த சில நாட்களுக்கு முன் காவல் துறையால் திரும்பப் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு தந்தை பெரியார் அரசு தலைமை மருத்துவமனையில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ம.விஜய் பாலாஜி சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின் முதன்முறையாக மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு பெருந்துறை விஜயமங்கலம் விஜய் விகாஸ் இன்டர்நேஷனல் பள்ளி பிளஸ்2 பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை



ஈரோடு பெருந்துறை, கம்புளியாம்பட்டியில் அமைந்துள்ள விஜய் விகாஸ் இன்டர்நேஷனல் பள்ளியில் 2025-26 ஆம் ஆண்டு கல்வியாண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் பிரகாசினி என்ற மாணவி 500-க்கு 474 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், ஹர்சிதா என்ற மாணவி 500-க்கு 469 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், ஆதித்யா மாணவர் 500-க்கு 468 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடமும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். பாடவாரியாகமாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள்: ஆங்கிலத்தில் 98, இயற்பியல் 88, வேதியியல் 97, கணிதவியல் 93, தாவரவியல் 94, பொருளியல் 98, வணிகவியல் 89,கணக்கியல் 89 மற்றும் கணினி அறிவியலில் 100 மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். சாதனை படைத்த இம்மாணவர்களுக்கு பள்ளியின் தலைவர் எம்.கலைச்செல்வன் அவர்களும், பள்ளியின் துணைத்தலைவர் மற்றும் தாளாளர் கே.பி.பழனிசாமி அவர்களும், மற்றும் பள்ளியின் பொருளாளர் என்.தவமணி அவர்களும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள்.

மேலும், பள்ளியின் அனைத்து இயக்குனர்கள், பள்ளியின் முதல்வர் எம்.பிரான்சிஸ் மற்றும் துணை முதல்வர் பிரஜேந்திரன் அவர்களும் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள் ஆகியோர் மாணவர்களைப் பாராட்டி சிறப்பித்தனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில் ஈரோடு நகருக்கான பிரத்யேக 'மிதிவண்டி மற்றும் நடைபாதை' திட்டமிடல், திற மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை தொடங்கப்பட்டது. ஈரோடு மாநகராட்சியில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலும், நீடித்த மற்றும் உள்ளடக்கி (NonMotorised Transport NMT) நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்தும் வகையிலும் "மோட்டார் அல்லாத போக்குவரத்து" (NonMot உருவாக்குவதற்கான சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை மாநகராட்சி கூட்டரங்கத்தில் நடைபெற்றது. இதில் யுகே பேக்ட் (UK PACT), ஐடிடிபி இந்தியா (ITDP India) மற்றும் சிஇஇடபிள்யூ (CEEW) ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்ட ஆணைகள் பளையம் ஆயுதப்படை முகாம் வளாகத்தில் ரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் சுருதி தலைமையில் வாராந்திர கவாத்து பயிற்சி நடைபெற்றது . அதன் பிறகு ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 17வது மாதமாக 2000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்

ஈரோடு மாவட்டம் தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 17-வது மாதமாக அன்னதானம் நடைபெற்றது. ஆஞ்சநேயர் படத்திற்கு சிறப்புஅலங்காரம்செய்யப்பட்டுபூஜைகள் நடைபெற்ற பின்பு அன்னதானம் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயரை பற்றிய பாடல் மோகன் அவர்கள் இயற்றியமைக்காக அவருக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. லக்காபுரம்பவர்கனெக்ட் உரிமையாளர் பாலாஜி சிறப்பு அழைப்பாளர்கள் கலைமகள் கல்வி நிலைய உரிமையாளர் பேரன் ஜெ. சிவகுமார், ஏடி அரிசி மண்டி காமராஜ், மணியன் மில் ஸ்டோர் சுரேஷ், கோவில் அறங்காவலர்கள், அன்னதான கமிட்டியின் நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு






2000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும்சுமார் 700 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் திருக்கோவில் அறக்கட்டளை சார்பாக தாளவாடியில் அமைந்துள்ள மனநல காப்பகத்தில் 250 பேருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

# ஆளுநரை சந்தித்த முதலமைச்சர் விஜய்யின் தனிச்செயலாளர்



சென்னை:அமைச்சர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில், தமிழக பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை முதலமைச்சரின் தனிச் செயலாளர் செந்தில் குமார் (மே 16) சந்தித்தார்.

தமிழக வெற்றி கழக தலைவர் சி. ஜோசப் விஜய், கடந்த 10 ஆம் தேதி தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். அப்போது அவருடன் கோபிசெட்டிபாளையத்தில் வெற்றி பெற்ற செங்கோட்டையன், தியாகராய நகர் தொகுதியில் வெற்றி பெற்ற என். ஆனந்த், வில்லிவாக்கம் தொகுதியில் வெற்றி பெற்ற ஆதவ் அர்ஜுனா, திருப்பரங்குன்றத்தில் வெற்றி பெற்ற சி.டி.ஆர். நிர்மல் குமார், எழும்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற ராஜ்மோகன், திருச்செங்கோடு தொகுதியில் வெற்றி பெற்ற அருண்ராஜ், மயிலாப்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற வெங்கடரமணன், காரைக்குடி தொகுதியில் வெற்றி பெற்ற பிரபு, சிவகாசி தொகுதியில் வெற்றி பெற்ற கீர்த்தனா ஆகிய 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்று கொண்டனர். ஆனால், இவர்களுக்கான இலாக்காக்கள் ஒதுக்கப்படவில்லை. இந்நிலையில் முதலமைச்சரின் தனிச் செயலாளர் செந்தில் குமார், தமிழக பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை (மே 16) சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது, அமைச்சர்களாக பதவி ஏற்றுள்ள ஒன்பது பேருக்கும், துறைகள் ஒதுக்கீடு தொடர்பாக கடிதம் வழங்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைக்க காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவு கொடுத்துள்ளன. இதில், காங்கிரஸ் கட்சியினர் தவெக-வின் அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என கூறப்படுகிறது. அமைச்சரவையில் காங்கிரஸை சேர்ந்த 2 பேர் இடம் பெறுவார்கள் என அக்கட்சியின் எம்பி மாணிக்கம் தாகூரும் கூறியுள்ளார். ஆனால், இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு தவெக தரப்பில் வெளியாகவில்லை. நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெகவுக்கு ஆதரவாக வாக்களித்த சி.வி. சண்முகம் தரப்பு அதிமுக எம்எல்ஏ-க்களுக்கும் அமைச்சரவையில் இடம்வழங்கப்படலாம் என தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலேயே முதலமைச்சரின் தனிச் செயலாளர் செந்தில்குமார், ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்துள்ளார். இது தமிழக அரசியல் களத்தில் முக்கிய நகர்வாக பார்க்கப்படுகிறது.

# 'Decide whether want to be part of geography, history, or not': Indian Army chief's warning to Pakistan



*General Upendra Dwivedi's remarks come around a week after India and its security forces marked the first anniversary of Operation Sindoor.*

*Indian Army chief General Upendra Dwivedi sent out a stern message to Pakistan on Saturday, saying Islamabad has to "decide if they want to be a part of geography and history or not.*

*Speaking at an interactive session at the Manekshaw Centre in New Delhi, General Dwivedi was asked about how the Indian Army will respond if the circumstances that led to Operation Sindoor last year come up again.*

*"If you have heard me earlier, what I have said... that Pakistan, if it continues to harbour terrorists and operate against India, then they have to decide whether they want to be part of geography or history or not," the Chief of Army Staff said in response. General Dwivedi's remarks come just over a week after India marked the first anniversary of Operation Sindoor, its airstrikes against Pakistan after a terror attack on Pahalgam.*

*The remarks came as a blunt message to Pakistan, which had recently expressed hope of restarting dialogue with India that has remained suspended for over a year now.*

*Pakistan on Thursday welcomed former Indian Army chief Gen MM Naravane's backing of a remark by Rashtriya Swayamsevak Sangh (RSS) leader Dattatreya Hosabale, who said the window for dialogue between India and Pakistan should always be open.*

*In a press conference, Pakistan's foreign office spokesperson Tahir Andrabi said that he saw the calls for dialogue within India as a "positive development", but added that it remains to be seen if there is any "official reaction" to those remarks.*

*"The voices within India calling for dialogue are obviously a positive development. We hope that sanity will prevail in India.... We, of course, will see if there is an official reaction to those voices in India," Andrabi said. Operation Sindoor was launched early on May 7 last year in retaliation for the deadly Pahalgam terror attack that happened on April 22. The Indian forces conducted precision strikes on multiple terror launchpads and other related infrastructure in Pakistan and Pakistan-occupied Kashmir (PoK). Pakistan also launched offensives against India, which lasted almost four days. All subsequent counter-offensives by New Delhi were also carried out under Operation Sindoor.*

*The military conflict between the two nuclear-armed neighbours, lasting nearly 88 hours, halted after they reached a ceasefire understanding on the evening of May 10. The understanding was reached after the Pakistani director general of military operations reached out to his Indian counterpart, requesting the same, the Indian Army has said.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.